| Headline | World Aids Day | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 01 Dec 2016 | Color | Black/white |
| Section | News | Circulation | 65,000 |
| Page No | 11 | Readership | 415,000 |
| Language | Tamil | ArticleSize | 334 cm² |
| Journalist | NULL | AdValue | RM 972 |
| Frequency | Daily | PR Value | RM 2,915 |



# உடலை நோய் பாதித்தாலும் உள்ளம் பாதிக்கக்கூடாது

## இன்று 1.12.2016 உலக எய்ட்ஸ் தினம்

(செல்லதுரை பழனியாண்டி)

எய்ட்ஸ் நோய் உலகத்திலேயே கடுமையான நோயாகும்.

இந்த நோயானது மனிதர்களின் நோய் எதிர்ப்பாற்றல் முறைமையின் செயல்படுதிறன் வலுவற்றதாகும் நிலையை படிப்படியாகத் தீவிரமடையச் செய்து வாய்ப்பை எதிர் நோக்கியிருக்கும் தொற்று நோய்களாலும், கட்டிகளாலும் மனிதர்களை பாதிப்படையச் செய்கிறது.

எச்ஐவி தொற்றுக்குட்பட்ட இரத்தம், விந்து, யோனித் திரவம், முன்விந்துத் திரவம், தாய்ப்பால் போன்ற உடல் திரவங்களைக் கொண்டு உடலில் உள்ள சீதச் சவ்வு அல்லது இரத்த ஓட்டத்துடன் ஏற்படும் நேரடித் தொடர்பினால் இந்த வைரஸானது ஒருவரிடம் இருந்து வேறொருவருக்கு செல்வதற்கு வாய்ப்புள்ளது.

எய்ட்ஸ் தற்பொழுது ஒரு பரவல் தொற்று நோயாகும். 2007 இல் உலகமெங்கும் 33.2 மில்லியன் மக்கள் எய்ட்ஸ் நோயோடு வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் 330,000 குழந்தைகள் உட்பட 2.1 மில்லியன் மக்கள் இந்நோயினால் கொல்லப்பட்டிருப்பதாகவும் கணிக்கப்பட்டது.

இம்மாணங்களில் நான்கில் மூன்று பகுதி ஆப்பிரிக்காவின் சகாராவுக்கருகில் ஏற்பட்டு பொருளாதார வளர்ச்சியைக் குறைத்து மனித மூலதனத்தை சிதைத்திருக்கிறது.




எய்ட்ஸ் நோய் ஆசனவாய், யோனிக்குழாய் அல்லது வாய் வழி கொள்ளும் உடலுறவினாலோ, இரத்தத்தினாலோ, கிருமி பாதித்த ஊசிகளின் உபயோகத்தினாலோ தாயிடமிருந்து குழந்தைக்கு கருத்தரிப்பு பிரசவம், பால் வூட்டுதல் போன்றவைகளினாலோ அல்லது வேறெந்த வகையிலாவது மேற்கொண்ட உடல்திரவங்களைச் சாரும் பொழுதோ ஏற்படக்கூடும்.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ, மேற்கு மத்திய ஆப்பிரிக்காவில் எச்ஐவி தோன்றியிருக்கக் கூடும் என்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எய்ட்ஸ் நோய் முதன் முதலில் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு, தடுப்பு மையங்களில் 1981 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது.

எச்ஐவி எய்ட்ஸ்கான சிகிச்சை நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த வல்லதாயிருந்தாலும் தற்சமயம் இந்நோய்க்கு தடுப்பூசியோ, நிரந்தர தீர்வோ இல்லை.

இறப்பு விகிதத்தையும், பாதிப்பு விகிதத்தையும் குறைக்க வல்லதாயிருந்தாலும் இம்மருந்துகள் விலையுயர்ந்தனவாகவும் கிடைப்பதற்கு வசதி இல்லை.

எய்ட்ஸ் நோய் கண்டவர்களுக்கு காபோசியின் சதைப்பற்று கருப்பை முகப்பு புற்றுநோய், நிணத்திசுப்புற்று என்றழைக்கப்படும் நோய் எதிர்ப்பு மண்டல புற்றுநோய் போன்ற நோய்கள் எளிதாக தாக்கும் தன்மை உள்ளது.

கூடுதலாக எய்ட்ஸ் நோய் கண்டவர்களில் உடலளவில் நோய் அறிகுறிகளான காய்ச்சல், வியர்வை, (குறிப்பாக இரவு நேரங்களில்) வீங்கிய சுரப்பிகள், நடுக்கம், தளர்ச்சி, எடை குறைவு போன்றவை காணப்படும்.

நோய் உடலைப் பாதித்தாலும் உள்ளம் பாதிப்புக்கு இல்லாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

எந்தக் கடுமையான நோய்களையும் குணப்படுத்திக் கொண்டு விட முடியும் என்கிற நம்பிக்கை நமக்கு இருக்க வேண்டும்.

1.12.2016 இன்று உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

Powered by: isentia